**செய்தி வெளியீடு எண்: 067** **நாள்: 24.01.2018**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.1.2018) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற 68–வது தேசிய கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி நிறைவு விழாவில் ஆற்றிய உரை</u>**

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
திரு. **பாலகிருஷ்ண ரெட்டி** அவர்களே!

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
திரு. **ஜெயக்குமார்** அவர்களே!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
டாக்டர் **சி. விஜயபாஸ்கர்** அவர்களே!

வரவேற்புரையாற்றிய தமிழ்நாடு கூடைப்பந்தாட்ட கழக தலைவர்
திரு. **V.V.R. ராஜ் சத்யன்** அவர்களே!

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர்
**திரு. தீரஜ்குமார்** அவர்களே!

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர்
திருமதி **ரீட்டா ஹரிஷ் தாக்கர்** அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே,
சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

தமிழ்நாடு கூடைப் பந்தாட்டக் கழகச் செயலாளர்
திரு. **ஆதவ் அர்ஜுன்** அவர்களே!

தேசிய கூடைப் பந்தாட்ட கழக சம்மேளனத் தலைவர்
திரு. **K. கோவிந்தராஜ்** அவர்களே!

தேசிய கூடைப் பந்தாட்ட கழக சம்மேளனத்தின்
செயலர் திரு. **சந்திரமுகி சர்மா** அவர்களே!

கூடைப் பந்தாட்ட விளையாட்டின் பயிற்சியாளர்களே!
விளையாட்டு வீரர், வீராங்கனைகளே, பொதுமக்களே,
ஊடக மற்றும் பத்திரிகைத் துறை நண்பர்களே,
உங்கள் அனைவருக்கும் எனது பணிவான
மாலை வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.
**மகாகவி பாரதியார்** அவர்கள் தனது பாப்பா பாடலில்,

**“ஓடி விளையாடு பாப்பா – நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா– ஒரு**
**குழந்தையை வையாதே பாப்பா”**

என்று பாடியிருப்பார்.

தேசிய கவி பாரதியார் அவர்கள் இந்தப் பாடலை
குழந்தைகளுக்காக மட்டுமே பாடவில்லை,
அனைத்துத் தர மக்களுக்கும் சொல்லும் ஒரு நீதியாக
இதை மனதில் கொள்ள வேண்டும்.

விளையாட்டு என்பது உடல் நலத்திற்கு மட்டுமல்ல,
சமுதாய ஒருமைப்பாட்டுக்குமான ஒரு நிகழ்வும் தான்.
குழந்தைகளின் மனதில் தன் கருத்துகளை எளிதில்
பதிய வைத்துவிட்டால், அக்குழந்தைகள்
எதிர் காலத்தில் இந்த சமுதாயத்தில்
நல்லிணக்கத்தோடு நடந்து கொள்ளும்
என்பதால் தான் தேசிய கவி பாரதியார் அவர்கள்
பாப்பாவை மையப்படுத்தி இந்தப் பாடலைப் பாடினார்கள்.

விளையாட்டு என்பது பொழுதுபோக்கிற்கு மட்டுமல்ல,
உடல் நலத்தையும், ஆரோக்கியத்தையும்
தக்க வைத்துக் கொள்ளும் ஒரு யுக்தியாகவே
நாம் கருத வேண்டும்.

விளையாட்டு என்பது
பொழுதுபோக்கிற்காக மட்டுமல்லாமல்,
உடல் நலம், மன நலம் பேணுவதாகவும்,
வாழ்க்கைக்கு பயிற்சி அளிக்கும் களமாகவும் விளங்குகிறது.

சாதி, மதம், இனம், மொழி என
எந்த பேதமும் இல்லாமல்

மக்களை ஒன்றிணைக்கும் சக்தியாய் திகழ்கிறது.
அத்தகைய விளையாட்டுக்கு
முக்கியத்துவம் அளிக்கும் வகையில்
தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான
நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா
அவர்களின் அரசு பல விளையாட்டு வீரர்களை
ஊக்குவித்து வருகிறது.

இதன் ஒரு அங்கமாக,
விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், உலகத் தரத்திலான
விளையாட்டு ஆடுகளங்களை அமைத்தல்,
இளம் வீரர்களை அடையாளம் கண்டு
தொடர் பயிற்சி அளித்தல்,

சாதனைகள் படைக்கும் வீரர்களை
ஊக்குவிக்கும் வகையில்
உயரிய ஊக்கத் தொகை மற்றும்
உதவித் தொகை வழங்கி கவுரவித்தல் போன்ற
பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு
செயல்படுத்தி வருகிறது.

1992ஆம் ஆண்டு **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு**
**ஆணையத்தை** உருவாக்கி, சென்னையில்
260 நாட்களில் உலகத் தரம் வாய்ந்த

**ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம்,**
**இந்த நேரு உள் விளையாட்டரங்கம்,**
**மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம்,**
**நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம்,**
**வேளச்சேரி நீச்சல் குள வளாகம்**

போன்ற நவீன விளையாட்டு அரங்கங்கள்,
அதுமட்டுமல்லாமல் இந்தியாவிலேயே
முதன் முதலாக விளையாட்டுக்கென
125 ஏக்கர் நிலப்பரப்பில் காஞ்சிபுரம் மாவட்டம்
மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வி
மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகம்
மற்றும் மாவட்டங்களில் நவீன விளையாட்டு

வசதிகள் போன்ற சிறந்த விளையாட்டு கட்டமைப்பு
வசதிகளை ஏற்படுத்தி தமிழ்நாட்டினை விளையாட்டுத்
துறையில் முன்னோடி மாநிலமாக்கியவர்
மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

1995 ஆம் ஆண்டு
ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்,
2013 ஆம் ஆண்டு உலக சதுரங்க போட்டி போன்ற
சர்வதேச போட்டிகளை தமிழ்நாட்டில்
நடத்திய பெருமையும், பன்னாட்டுப் போட்டிகளில்
பதக்கங்கள் பெறும் தமிழ்நாட்டு வீரர்களை
ஊக்குவித்து பாராட்டும் வகையில்,
உயரிய ஊக்கத் தொகை
வழங்க ஆணையிட்ட பெருமையும்,
மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி
அம்மா அவர்களையே சாரும்.

கடந்த ஆண்டில் மட்டும் அரியலூர், விழுப்புரம்,
காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில் உள்ளிட்ட
10 இடங்களில் 21 கோடியே 96 லட்சத்து
65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட
பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கங்களை
பொதுமக்களின் பயன்பாட்டிற்கு
மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும்
இந்த அரசு திறந்து வைத்துள்ளது.

இது தவிர, திண்டுக்கல், தஞ்சாவூர்
மற்றும் தூத்துக்குடியில் 4 கோடியே 50 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு
உள் விளையாட்டு அரங்கங்களை
பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து
வைக்கப்பட்டுள்ளது. இது தவிர, அரியலூர்,
தூத்துக்குடி மற்றும் தேனியில்
3 கோடியே 38 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்
மதிப்பீட்டில் விளையாட்டு விடுதிகளுக்கான
புதிய கட்டிடங்கள், தூத்துக்குடி மாவட்டம்
கோவில்பட்டியில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
புதியதாக மின்னொளியுடன் அமைக்கப்பட்ட
செயற்கை இழை ஹாக்கி மைதானம்,

திருவள்ளூரில் 1 கோடியே 36 லட்சத்து 91 ஆயிரம்
ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்ட
நீச்சல்குளம்,   சென்னை
நேரு உள்விளையாட்டரங்க வளாகத்தில்
1 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
புதியதாக அமைக்கப்பட்ட **சறுக்கு வளையம்,**

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில்
56 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்
புதியதாக கட்டப்பட்ட சிறு விளையாட்டரங்கம்,

17 மாவட்டங்களில்
4 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
தேவையான நவீன உபகரணங்களுடன்
புதுப்பிக்கப்பட்ட உடற்பயிற்சி கூடங்கள் என

கடந்த ஓராண்டில் மட்டும்
அம்மாவின் அரசால் 44 கோடியே
74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு,
பொது மக்களின் பயன்பாட்டிற்கு
திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தேசிய மற்றும் சர்வதேச அளவில்
பதக்கங்கள் பெறும் தமிழ் நாட்டைச் சேர்ந்த
விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளின்
சாதனைகளை பாராட்டும் வண்ணமும்,
அவர்கள் மேலும் பல சாதனைகள் புரிய
ஊக்குவிக்க வேண்டும் என்ற அடிப்படையிலும்
உயரிய ஊக்கத் தொகையும்,

பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையும்
மாண்புமிகு அம்மாவின் அரசால்
வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஓராண்டில் மட்டும் தேசிய விளையாட்டுப்
போட்டிகளில் பதக்கங்கள் வென்ற  86 விளையாட்டு
வீரர்களுக்கு 3 கோடியே 62 லட்சம் ரூபாயும்,

சர்வதேச அளவில் பதக்கங்கள் வென்ற
42 விளையாட்டு வீரர்களுக்கு 3 கோடியே
30 லட்சம் ரூபாயும் உயரிய ஊக்கத் தொகையாக
வழங்கப்பட்டது. அவ்வாறே, 71 பயிற்சியாளர்களுக்கு
1 கோடியே 95 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக
வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் விளையாட்டு ஆர்வத்தை பரவலாக்கி
இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்பதை
அதிகரிக்கச் செய்யும் வகையில்
உலகத் தரத்திலான போட்டிகளை
மாநிலத்தில் நடத்திட தமிழ்நாடு அரசு ஒத்துழைப்பு நல்கி
ஊக்கம் அளித்து வருகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு,
தேசிய அளவிலான போட்டிகளை
தமிழ்நாட்டில் நடத்துவதற்கு நிதியுதவி
அளித்து வருகிறது. அந்த வகையில்,
தமிழ்நாடு அரசு, தேசிய அளவிலான போட்டிகளை
நடத்துவதற்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவியினை
3 லட்சம் ரூபாயிலிருந்து 10 லட்சம் ரூபாயாக
உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது.

கூடைப்பந்து விளையாட்டில் தமிழ்நாடு
சிறந்து விளங்கி வருகிறது.
1980 ஆம் ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற
ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த
திரு. அமர்நாத் அவர்கள் தலைமையிலான
இந்திய கூடைப்பந்து அணி பங்கேற்றது.
இந்திய அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த
கூடைப்பந்து வீரர்கள் இடம் பெற்று வருகிறார்கள்.

தற்போதைய இந்திய அணியில் இடம் பெற்றுள்ள
**திரு ஜீவானந்தம், திரு காசிராஜன் மற்றும்**
**திரு காளிதாஸ்** ஆகியோர்
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால்
நடத்தப்பட்டு வரும் முதன்மை நிலை
விளையாட்டு விடுதியில் பயின்ற மாணவர்கள்
என்பதை பெருமையுடன் இந்த நேரத்தில்
குறிப்பிட விரும்புகிறேன்.

தற்போது விளையாடிக் கொண்டிருக்கும்
தமிழ்நாடு கூடைப்பந்து அணிக்கு
நன்கு பயிற்சியளித்து அவர்களை
ஊக்கப்படுத்தும் வகையில்,
கூடைப்பந்து விளையாட்டில் சிறந்து விளங்கும்
செர்பிய நாட்டைச் சேர்ந்த **திரு. மிலன் ஒப்போசிச்** என்ற
ஒரு சிறந்த பயிற்சியாளரை வரவழைத்து
பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

தமிழ்நாடு அணியிலும், இந்திய அணியிலும்
பல வருடங்களாக விளையாடி
பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் **அனிதா,**
அமெரிக்காவின் தேசிய கூடைப்பந்து
சம்மேளனத்தின் முதல்கட்டத் தேர்வில்
கலந்து கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்
நாகப்பட்டினத்தைச் சேர்ந்த **புஷ்பா** என்ற
கூடைப்பந்து வீராங்கனை போன்றோர்
தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கிறார்கள்.

அது மட்டுமல்லாது, அமெரிக்காவின்
தேசிய கூடைப்பந்து சம்மேளனத்தின்
போட்டிகளில் தன் பங்களிப்பை அளித்து வரும் பஞ்சாப்
மாநிலத்தைச் சேர்ந்த **திரு. சத்னம் சிங் பமாரா**
என்ற வீரர் இங்கே தற்போது நடக்கும் போட்டியில்
கலந்து கொண்டுள்ளார் என்பதை அறிகிறேன்.
அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறேன்.

2017 ஆம் ஆண்டு தேசிய அளவில் நடைபெற்ற
14, 17 மற்றும் 19 வயதினருக்கான கூடைப்பந்து
போட்டிகளில் தமிழ்நாட்டு பெண்கள்
அணியினர் முதலிடம் பெற்றுள்ளனர்.
2017 ஆம் ஆண்டு நடைபெற்ற
சீனியர் தேசிய கூடைப்பந்து போட்டிகளில்
தமிழ்நாட்டு ஆடவர் அணியினர்
இரண்டாமிடம் பெற்றுள்ளனர்.

இவ்வாறாக, தேசிய அளவில்
தமிழ்நாட்டு கூடைப்பந்து வீரர்கள்

தொடர் வெற்றிகளை பெற்று வருகின்றனர்.

தற்போது, 68வது தேசிய கூடைப்பந்து
சாம்பியன்ஷிப் போட்டிகள் 17ஆம் தேதி முதல்
மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.
நாடு முழுவதிலும் இருந்து 31 ஆண்கள் அணியும்,
26 பெண்கள் அணியும் கலந்து கொண்டுள்ளனர்.

போட்டிகளில் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்று
சாம்பியன்ஷிப் பட்டம் வெல்லும் அணியினருக்கும்,
போட்டிகளில் பங்கேற்று
தங்களது திறமைகளை வெளிப்படுத்திய
இதர அணியினருக்கும் எனது வாழ்த்துக்களையும்,
பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு அனைவருக்கும் பரிச்சயமான
கூடைப்பந்து ஆட்டத்தில்
மிகப் பெரிய வெற்றியாளராகத் திகழ்ந்த
அமெரிக்காவின் மைக்கேல் ஜோர்டான் என்பவர்,
தனது அனுபவத்தைப் பற்றிக் கூறுகையில்,
**தான் 300 போட்டிகளில் தோற்று இருப்பதாகவும்,**
**26 முறை போட்டியின் மிக முக்கியமான**
**தருணங்களில்தவற விட்டிருப்பதாகவும்,**
**அப்படிப்பட்ட பல தோல்விகள் தான்**
**தனது அனைத்து வெற்றிகளுக்கும்**
**ஆதாரம் ஆனதாக**க் குறிப்பிட்டுள்ளார்.

**‘முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்’**

**‘முயற்சி திருவினையாக்கும்’**

**‘முயன்றால் முடியாதது எதுவுமில்லை’**

**‘தோல்விகள் என்பவை வெற்றியின் படிக்கட்டுகள்’**

போன்ற நமது தமிழ் சான்றோர்களின் தத்துவங்களையே
வேதமாகக் கொண்டு, மனமும், உடலும் தளராமல்
தொடர்ந்து முயற்சி செய்வதும்,
இடையறாது பயிற்சி பெறுவதும் தான்
வெற்றியின் திறவுகோல் என்பதை
இளைஞர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு அரசு, விளையாட்டுத் துறைக்காக
பல கோடி ரூபாய்களை ஒதுக்குகிறது என்றால்,
அதற்கு **நன்றிக் கடனாக**
**விளையாட்டு வீரர்களாகிய நீங்கள்**
**தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் புகழை**
**உலக அரங்கிற்கு சிறப்பாக**
**கொண்டு செல்லும் அளவிற்கு விளையாட வேண்டும்.**

**இதை ஒவ்வொரு விளையாட்டு வீரரும்**
**உறுதிமொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று**
**இந்த இனிய நேரத்தில்**
**நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

இந்தப் போட்டிகளைச் சிறப்பாக நடத்திய
இந்திய கூடைப்பந்து சம்மேளனம் மற்றும்
தமிழ்நாடு கூடைப்பந்து சங்க தலைவர்
திரு. ராஜ் சத்யன்,
செயலாளர் **திரு. ஆதவ் அர்ஜுன்**
மற்றும் நிர்வாகிகளுக்கு
எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

வணக்கம்!!

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**